இந்தக் கேள்வியைத் தாமதமாகக் கேட்டிருக்கிறார். கலைஞர் அவர்களின் அரசு கேள்வி வருவதற்கு முன்பே நடைமுறைப் படுத்துகிற அடிப்படையில் வ.உ.சி. அரசு மருத்துவ மனை என்று, பெயர் முதலில் சூட்டப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, பெயர் சூட்டிய பிறகாவது அந்த மருத்துவமனைக்கு நல்லமுறையில் நவீன வசதிகளைக் கொண்டுவர அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன். ஏனென்றால், வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப் பட்ட மருத்துவமனை இன்றைக்கு அப்படியே இருக்கிறது. எந்த சௌகரியமும் இல்லை. நாங்கள் நோயாளிகளை முக்கிய மாகப் பார்க்க வேண்டுமென்றால் தூத்துக்குடிக்கு போகவேண்டும் அல்லது கோவில்பட்டிக்கு ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும். அந்தத் தாலுக்காவில் இது ஒரு மருத்துவமனை தான் இருக்கிறது. ஆகவே, படுக்கை வசதிகளையும், நவீன வசதிகளையும் ஏற் படுத்திக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பெயர் மாற்றத்தைத் தான் கேட்டிருக்கிறார். வ.உ.சி. மருத்துவமனை என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக, பெயரை வைத்திருக்கிற அரசு, பெயருக்கு ஏற்ப நவீன வசதிகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, அந்த மருத்துவ மனையில் நல்லமுறையில் நவீன வசதிகளை ஏற்படுத்தவிருக்கிற இந்த அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி நடைபெறும் பேச்சுவார்த்தை குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அ. இ. அ. தி. மு. க. கலந்து கொள்ளாதது குறித்து

*திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, இன்று காலையில் கூட்டப்பட்டிருந்த காவிரி நீர்ப் பிரச்சினை சம்பந்த மான அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அண்ணா திராவிட முன் னேற்றக் கழக சார்பில் நாங்கள் கலந்து கொள்ளவில்லை. அதற்குக் காரணம் நடுவர். . . .

[1990 ஏப்ரல் 20]

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினை குறித்து இந்த அவையில் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் இந்த நேரத்தில் எதையாவது சொன்னால் அது ஒரு வேளை தவறான விளைவுகளுக்குக் காரணமாகும். ஆகவே, அப்படியே ஏதாவது சொல்ல வேண்டிய அவசியம் இருந்தால் முதலமைச்சர் அவர்கள் இருக்கிறபோது, அவர்களைக் கலந்து கொண்டு அதற்குப் பிறகு தேவையானால் தெரிவிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னவருடைய கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். நான் அதிலே தவறாகவோ, வாதத்தை உண்டாக்குகிற வகையிலோ பேச வேண்டுமென்று விரும்பவில்லை. நாங்கள் ஏன் கலந்துகொள்ள வில்லை என்பதற்குக் காரணம் சொல்ல விரும்பினேன். (குறுக் கீடுகள்).

10-00 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அவரவரும் ஒவ்வொரு காரணத்தால் ஒவ்வொரு காரியத்தில் கலந்து கொள்ளலாம், கலந்து கொள்ளாமலும் இருக்கலாம். அவற்றைச் சட்டமன்றத்திலே சொல்லியாகவேண்டும் என்ற ஒரு கட்டாயமும் இல்லை. அதை அனுமதிப்பதும் கூட அவ்வளவு நல்லதல்ல என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேறு பிரச்சினை ஏதாவது இருந்தால் பேசலாம். (குறுக்கீடுகள்) அருள்கூர்ந்து இது தொடர்பாக, அவையிலே காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக எதுவும் சொல்லவேண்டாம். நேற்றே முதல்வர் அவர்கள் இது தொடர் பாக எந்தக் கருத்து வேறுபாடும் இருக்கக்கூடாது என்று சொல்லி யிருக்கிறார்கள். அப்படி ஏதாவது பேசுவதாக இருந்தால், நீங்கள் எழுதிக் கொடுங்கள். அதை முறைப்படி முதல்வர் அவர்களுக்கு அனுப்பி, அதற்கான விடையைப் பெற்று, அதற்குப் பிறகு என்ன செய்யலாம் என்பதைப் பார்க்கலாம். மற்றபடி இதைப்பற்றி அவையிலே, இப்போது பேசக்கூடாது. (குறுக்கீடு கள்), அவர்கள் பேசுவது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. இது தொடர்பாக வேறு செய்திகள் இருந்தால் நீங்கள் சொல் லுங்கள். (குறுக்கீடுகள்). வேறு செய்திகள் இருந்தால் சொல்லுங் கள். எல்லோரும் இதையே பேசிக் கொண்டிருந்தால் நன்றாக இராது. எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்).

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, முன்னவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். முதல்வர் அவர்கள் வந்ததற்குப் பின்னர் இதைப்பற்றி பேசலாம் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் வந்த பின்னாலே பேசுவதிலே எங்களுக்கு ஆட்சேபணை ஒன்றும் இல்லை. ஆனால் கருத்தைச் சொல்ல ஆரம்பித்தபோது ......(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு சிறிய செய்தி. காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக ஒரு பெரிய சிக்கல் நீண்டகால மாகத் தீர்க்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. அனைத்துக் கட்சியினரும் ஒருங்கிணைந்து தமிழக அரசோடு உறவு கொண்டு ஒத்துழைத்து, சிறப்பாகச் செய்யவேண்டிய அளவிற்கு எடுக்கப் பட்ட பிரச்சினை இது. இது தொடர்பாக வேறு ஏதேனும் உள் பிரச்சினைகள் இருக்குமானால், அவற்றை முதல்வர் அவர் களிடத்திலே தெரிவித்தால் நான் என்ன என்று கேட்டு, உங் களுக்குச் சொல்லி, அதற்குப் பிறகு அவையிலே எழுப்பமுடியுமே தவிர, இந்தப் பிரச்சினைக்கு வேறு வகையிலே வடிவம் கொடுக்க வேண்டாம் என்பதற்காகத்தான் அவை முன்னவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே இதைவிட்டு விட்டு வேறு ஏதேனும் சொல்ல விரும்பினால் நீங்கள் சொல்லலாம். இந்தச் செய்தி தொடர்பாக நீங்கள் எழுதிக் கொடுத்தால், நான் தக்க வாறு அதற்கான விடையைத் தக்க நேரத்தில் தெரிவிக்க முடியும். (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு முன்னவர் அவர்கள் முதல்வர் அவர்கள் வந்ததற்குப் பின்னாலே இதைப்பற்றிப் பேசலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றிப் பேசு வதில் எனக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை. அவர்கள் வந்த பிறகு கூட நாங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். ஏன் என்றால், இன்றைக்குக் காவிரி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக பத்திரிகையிலே வந்துவிட்டது. நடுவர் மன்றத் தீர்ப்பை நாங்கள் வற்புறுத்துகிறோம். அதை வற்புறுத்துகிறோம் என்றுதான் சொல்கிறோம். இதிலே பிரச்சினை வரவேண்டும் என்று நாங்கள் விரும்பவில்லை.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு உண்மையிலே அக்கறை இருக்கிறது என்பதிலே எனக்குச் சந்தே கம் இல்லை. ஆனால் பத்திரிகையிலே வருகிற செய்திகளுக்கு எல்லாம் சட்டமன்றத்திலே ஒரு பதிலை அளிக்கவேண்டுமென்றோ சட்டமன்றத்தைப் பத்திரிகைகளுக்குப் பதில் அளிப்பதற்காகப் பயன்படுத்தவேண்டுமென்றோ நான் கருதவில்லை. எல்லாவற்றை யும்விட இந்தப் பிரச்சினை சற்று உளப்பூர்வமாக அனைவரும் ஈடுபட்டுச் செய்கிற ஒரு காரியமாக இருப்பதால், இந்தப் பிரச்சினையில் வேறுவிதமான நிலை ஏற்படுவதற்கு இடம் தராமல் இருப்பதற்காகத்தான் நான் கேட்டுக்கொண்டேன்.